**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சரவணன் | நாள் | 18.09.2024 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணராஜ் (எ) ராஜீகவுண்டர் | | |

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

4) வாதி எனக்கு என்ன உறவு என்றால், என் அண்ணன் மகன் ஆவார். வாதியின் தந்தை என் உடன் பிறந்த சகோதரரா என்றால், ஆமாம். எனக்கும், வாதி குடும்பத்திற்கும் இடையே தடவழி சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால், சரிதான். மேற்படி தடவழி பட்டா நிலத்தில் வருகிறதா அல்லது புறம்போக்கு நிலத்தில் வருகிறதா என்றால், உண்மையில் அவ்வாறு தடமே இல்லை. ஆனால், வாதி நத்தம் நிலத்தில் தடவழி உள்ளதாக கூறுகிறார்.

5) தாவா சொத்திற்கு நான்குபுறமும் யார் யார் நிலம் அமைந்துள்ளது என்றால், தாவா சொத்திற்கு வடக்கில் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கில் எங்கள் இருவருக்கும் பாத்தியப்பட்ட பொது தடவழி உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கில் ரைஸ்மில் சிந்தாமணி வகையறா நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கில் எங்களது பாக நிலங்கள் உள்ளது. ச.எண்.284/2B12 ஆனது, தாவா சொத்திற்கு எந்த புறத்தில் உள்ளது என்றால், வடக்கு புறத்தில் உள்ளது. மேற்படி ச.எண்.284/2B12 ஆனது, வருவாய் ஆவணங்களில் சந்திரசேகரன், சரவணன் ஆகியோர் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால், இல்லை. ச.எண்.284/2B12 ஆனது, காலியிடம் என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. ச.எண்.284/2B11 ஆனது, என் பெயரில் தனியாக தாக்கலாகியுள்ளது.

6) பொதுவாக ஒரு நிலத்திற்கு பட்டா வழங்குவது மற்றும் பட்டா மாறுதல் செய்வது போன்றவற்றை வருவாய் துறையினர் ஆவணங்கள் மற்றும் அனுபவத்தை பரிசீலித்து அதன்பேரில்தான் வழங்குவார்கள் என்றால், சரிதான். நத்தம் காலியிடம் என்பது

குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட பகுதி என்றால், சரிதான். அவ்வாறு குடியிருப்பிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தை பொறுத்து தனிநபர் எவரும் தடவழி உரிமை கோர இயலாது என்றால், சரிதான். அவ்வாறு நத்தம் காலி நிலத்தை ஒருவருக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றால், அவருக்கு வேறு எங்கும் சொந்தமாக நிலம் இருக்க கூடாது என்றால், சரிதான்.

7) அரசாங்கத்தால் நத்தம் காலியிடம் என வகைபாடு செய்யப்பட்ட இடத்தில் வாதி தடவழி உரிமை கோர இயலாது என்றால், சரிதான். தனிநபர் எவரும் அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக காலியிடம் என வகைபாடு செய்யப்பட்ட இடத்தை அரசு விதிமுறைகளுக்கு புறம்பாக அவர்களது தனி பயன்பாட்டிற்காக மேற்படி நிலத்தின் வகைபாட்டை மாற்ற கோர இயலாது என்றாலும், சரிதான். எனக்கும், வாதி குடும்பத்திற்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்ட சமயத்தில் அவரவர்கள் நிலத்திற்கு தடவழி பாத்தியதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வரைபடத்திலேயே பொது தடவழி உட்பிரிவு செய்யப்பட்டு, குறிப்பிடப்பட்டுள்ளது.

8) நான் என் கிரய சொத்திற்கும் தடவழி கண்டுதான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால், சரிதான். வாதி மற்றும் 1ம் பிரதிவாதியாகிய எங்களுக்கும் அவரவர்கள் நிலத்திற்கு ஆவணங்களின் படியே தடவழி உரிமையுள்ள நிலையில், நத்தம் காலியிடத்தை பொறுத்து, நாங்கள் அரசாங்கத்திடம் தடவழி உரிமை எதுவும் கோர இயலாது என்றால், சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.